OS:685/2018

Date: 03.01.2024

பெயர் :கணேசன்

**வாதி தரப்பு சாட்சி 2 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:</u>- 3, 4 பிரதிவாதிகள் தரப்பில்

வழக்கு சொத்தின் ஒரு பகுதியை 3 ம் பிரதிவாதி சம்பூரணம் என்பருக்கு ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் படி 2 ஏக்கர் நிலத்திற்கு சர்வே எண். 51/2B என உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான், வில்லங்க சான்று 2013 ம் ஆண்டு பார்த்தபோது தான் தெரியும் . மேற்படி உட்பிரிவு செய்யப்பட்ட பிறகுதான் 3 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதிக்கு 2011 ல் ஒரு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரிதான் அது எனக்கு 2013 ம் ஆண்டில் தான் தெரியவரும். வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்கு தயார் செய்வதற்காக வாதியுடன் சேர்ந்து உடன் இருந்தேன் என்றால் சரிதான். வழக்குரையில் உள்ள சங்கதிகள் வழக்கு தாக்கல் செய்யும்போதே எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1 ம் பிரதிவாதி செல்லமாவிற்கு வயதாகிவிட்டது என்றால் அவருக்கு 70 வயதிருக்கும். 1 ம் பிரதிவாதிக்கு நான் அவருக்கு தேவையான உதவிகளை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான், பார்த்து வருகிறேன். எனக்கும் எனது மனைவிக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் சுமூக உறவு உள்ளதா என்றால் 1 ம் பிரதிவாதியிடம் பேச்சு வார்த்தை இல்லை இருப்பினும் பெரியவர்கள் என்ற முறையில் பார்த்து வருகிறேன். வாதியின் தந்தை அவரது பிள்ளைகளுக்கு திருமணத்தின்போது உரிய சீர்வரிசைகள் செய்வதாக உறுதியளித்தார் ஆனால் அதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. வாய்மொழியாக சொன்னார். எந்த வருடம் வாய்மொழியாக சொன்னார் என்றால் 2002 அல்லது 2003 ம் ஆண்டில் சொன்னார்.

வாதியின் தந்தை கந்தசாமி இறக்கும்வரை சுயநினைவுடன்தான் இருந்தார் என்றால் சரிதான். வாதியின் தந்தை சமமாக சொத்தினை பிரித்து கொடுப்பதாக நான் சொல்வது பொய்யானது என்றும், அவர் 2006 ம் ஆண்டு 3 ம் பிரதிவாதி பெயருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நல்ல மனநிலையில் எழுதிகொடுத்தார் என்று சொன்னால் சரிதான், பிள்ளைகளுக்கு ஒரு ஒரு ஏக்கர் நிலத்தை எழுதிகொடுக்க சொல்லி கொடுத்ததில் மோசடியாக மேற்படி ஆவணம் 4 ம் பிரதிவாதியால் எழுதப்பட்டது. 4 ம் பிரதிவாதியால்

மோசடியாகவோ அல்லது தவறுதலாகவோ எழுதப்பட்டதாக சொல்வதற்கு தனியாக காவல் துறையினர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. 2006 ம் ஆண்டு 3 ம் பிரதிவாதிக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுக்கப்பட்டதில் அதில் சாட்சிகள் யார் யார் என தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை பொருத்து சாட்சிகளை விசாரித்துள்ளேனா என்றால் இல்லை, ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் வழக்கு சொத்தில் ஒரு தொகுப்பு வீடு உள்ளதாக காட்டியுள்ளேன் அது வழக்கு போடும்போது வழக்கு சொத்தில் காட்டப்பட்டதா என்றால் கூரை என்பதால் விட்டுவிட்டோம் அதற்கு பின்புதான் 1 ம் பிரதிவாதி பெயரில் தொகுப்பு வீடு கட்டப்பட்டது. தொகுப்பு வீடு எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை, 10 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். தொகுப்பு வீடு கட்டப்பட்டதற்கான அடி நிலம் யார் பெயரில் உள்ளது என்றும், அரசால் தொகுப்பு வீடு கட்ட அனுமதி வழங்கப்பட்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

வழக்கு தாக்கல் செய்யும்போது 1 ம் பிரதிவாதி எங்களுடன் இருந்தாரா என்றால் எப்போதும் இருந்ததில்லை. வழக்கு தாக்கல் செய்யும்போது 3 ம் பிரதிவாதியும், 1 ம் பிரதிவாதியும் சுமூகமான உறவில் இருந்தார்களா என்றால் சரியான படி சுமூக உறவு இல்லை. பார்த்தால் பேசுவார்கள். தானசெட்டில்மெண்ட் ஆவணம் 3 ம் பிரதிவாதி பெயரில் இருப்பதை பொருத்து எனது மாமியார் 1 ம் பிரதிவாதி எனது மாமனார் இறந்த 2 ஆண்டுகள் கழித்துதான் சொன்னார். அப்போது பிள்ளைகள் அனைவருக்கும் ஒரு ஒரு ஏக்கர் நிலம் தருவதாக சொன்னார். இந்த வழக்கை எனது மாமியார் சொல்லிதான் எனது மனைவி தாக்கல் செய்தார். 05.12.2011 தேதியில் 2 ம் பிரதிவாதிக்கு எனது மனைவியை தவிர மற்ற குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு பாகபத்திரம் 3 ம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்துக்களை தவிர்த்து வேறு சொத்துக்களை எழுதிகொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 2 ம் பிரதிவாதி பெயரில் உள்ள பாகபத்திரத்தில் உள்ள சொத்துக்களை பொருத்து பாகம் பெற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேனா என்றால் இல்லை, எல்லா சொத்திலும் பாகம் வேண்டும். எனது மாமனாருக்கு தனிப்பட்ட சொத்து என்பதால் அவர் சொத்தினை யாருக்கு வேண்டுமானாலும் எழுதிகொடுக்க முழுஉரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனார் கந்தசாமி

உயிருடன் இருக்கும்போதே வழக்கு சொத்தின் ஒரு பகுதி சர்வே எண்.51/2B ல் 3 ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிகொடுத்தும் அதன்பின்பு 3 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதிக்கு 24.11.2011 ல் ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்து அந்த செட்டில்மெண்ட் ஆவணமும் அமலுக்கு வந்து நடைமுறையில் இருந்து வருவதால் அதில் எனது மனைவியான வாதிக்கு எந்த பாகமும் ஏற்படுவதில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் எனது மாமனார் 3 ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்த சொத்தானது உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.51/2B என உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது மாமியார் தான் தற்போது சொத்தில் இருந்து வருகிறார். வழக்கு 1 வது அயிட்ட சொத்தில் 1 ம் பிரதிவாதி தான் இருந்து வருகிறார் என்பதை எனது மனைவி தாக்கல் செய்த வழக்குரையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

தாவா 2 வது அயிட்ட சொத்தினை யார் ஓட்டி வருகிறார்கள் என்றால் 1, 2 பிரதிவாதிகள் ஓட்டி வருகிறார்கள். தாவா 1 வது அயிட்ட சொத்து தற்போது 4 ம் பிரதிவாதியால் வருவாய் ஆவணங்கள் பெயர் மாற்றம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு அனுபவத்திலும் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. 1 வது அயிட்ட சொத்தில் முன் பக்கத்தில் கேட் மற்றும் கம்பிவேலி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கேட் மற்றும் கம்பிவேலிகள் 4 ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் வந்தவுடன் செய்யப்பட்டது என்று சொன்னால் அது மோசடியாக செய்யப்பட்டது. 4 ம் பிரதிவாதி பெயரில் உள்ள வருவாய் ஆவணங்கள் அவரது பெயரில் இருப்பது தவறு என நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் எடுக்கவில்லை, எனக்கு 2013 ம் ஆண்டு தெரிய வந்ததால் வழக்கு தாக்கல் செய்தேன். வாதி தாவா 1 வது அயிட்ட சொத்தை பொருத்து பாகம் கேட்க எந்த விதமான உரிமையும் ஏற்படுவதில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்தை பொருத்து வாதி பாகம் கோருவதில் 3, 4 பிரதிவாதிகளுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. வழக்கு 1 வது அயிட்ட சொத்தில் 3 ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்ட 08.11.2006 முதல் நானோ, எனது மனைவியோ கூட்டு சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. மேற்படி 1 வது அயிட்ட சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. வாதி, 1, 2 பிரதிவாதிகள் வஞ்சக கூட்டு சேர்ந்து 3 ம் பிரதிவாதியிடம் இருந்த சொத்தினை அபகரிக்கவேண்டும் என்பதற்காக எனது மனைவி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 3, 4

பிரதிவாதிகளை காயபடுத்தவேண்டும் என்றும், அவர்களுக்கு தொந்தரவு அளிக்கவேண்டும் என்றும், நானும் எனது மனைவியான வாதியுடன் சேர்ந்து கெட்ட நோக்கத்துடன் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளதால் தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. தாவா 3 ம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் ஏற்பட்டு, அதற்கு பின்பு 4 ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்திலும் பாகம் கேட்கமுடியாது என்றும், மேற்படி பரிகாரங்கள் அனைத்தும் காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவியுடன் சேர்ந்து நான் இந்த வழக்கினை தூய கரங்களுடன் தாக்கல் செய்யவில்லை என்பதால் இந்த தாவா தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:- இல்லை.

ஒப்பம்/-PW2

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.